# NSW HEALTH

## COVID-19 Key Points - Wednesday 4 August 2021

NSW GOVERNMENT

**நியூ சவுத் வேல்ஸ் ஹெல்த்-ன் 2021 ஆகஸ்ட் 4-க்கான கோவிட்-19 பற்றிய முக்கிய குறிப்புகள்**

- நேற்று இரவு 8 மணிக்கு முன்னரான 24 மணிநேரத்தில், 233 புதிய கோவிட்-19 உள்ளூர் நோய்த்தொற்றுக்கள் நியூ சவுத் வேல்ஸ்-ல் பதிவாகியுள்ளன. குறைந்தது 47 நோய்த்தொற்றாளர்கள் சமூகத்தில் தொற்றுவிளைவிக்கக்கூடியவர்களாக இருந்துள்ளனர்.
- துரதிர்ஷ்டவசமாக, 20 வயதுப்பிரிவைச்சேர்ந்த ஒரு இளைஞர், கோவிட்-19 நோயால் இறந்துள்ளார். கோவிட் -19, இளையோர் மற்றும் வயதானவர்களுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடியது.
- 80 வயதுப்பிரிவினைச்சேர்ந்த, தடுப்பூசி போட்டுக்கொள்ளாத ஒரு பெண்மணியும் கோவிட் -19 காரணமாக இறந்துள்ளார். நாம், தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளச் செய்யவேண்டிய, பாதிப்புக்குள்ளாகக்கூடிய வயதானவர்கள் இன்னும் இருக்கிறார்கள்.
- ஹன்டர் நியூகாஸில் (Hunter Newcastle) பிராந்திய கழிவுநீரில், கவலைக்கிடமாக அதிக அளவு நோய்க்கிருமிகள் கண்டறியப்பட்டுள்ளன. மக்களுக்கு இலேசான அறிகுறிகள் இருந்தாலோ அல்லது கவலையுற்றாலோ, அவர்கள் முன்வந்து கோவிட்-19க்கான பரிசோதனையைச் செய்துகொள்ளுமாறு (get tested) வலியுறுத்தப்படுகின்றனர்.
- கோவிட்-19 பரிசோதனைக்காக நீங்கள் உங்கள் வீட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்படுகிறீர்கள், ஆனால் பரிசோதனையின் பின்னர் நீங்கள் நேராக வீட்டிற்குச் செல்ல வேண்டும். அத்துடன், எதிர்மறையான முடிவைப் பெறும் வரை, நீங்கள் சுய தனிமைப்படுத்தலை மேற்கொள்ளவேண்டும் (self-isolate). உங்கள் பரிசோதனைக்குப் பின்னர், சமூகத்தில் சுற்றித்திரிய வேண்டாம்.
- கோவிட்-19-ன் டெல்டா திரிபு நோய்க்கிருமி, அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டிடங்கள் ஊடாகப் பரவுகிறது. குடியிருப்பாளர்கள் கட்டாயம் பொதுவான பகுதிகளில் முகக்கவசங்களை (masks) அணிய வேண்டும், பலரும் பகிர்ந்து பயன்படுத்தும் இடங்களில் கூடுவதைத் தவிர்க்க வேண்டும், அத்துடன் மின்தூக்கிகளை (லிஃப்ட்) ஏனையோருடன் பகிர்ந்து பாவிப்பதைத் தவிர்க்க வேண்டும்.
- 18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினர், தடுப்பூசியைப் போட்டுக்கொள்ள வேண்டும். நீங்கள் தடுப்பூசித் தகுதிச் சரிபார்ப்பிக்கு (Vaccine Eligibility Checker) செல்லலாம், அல்லது ஹாட் டாக்-க்கு (Hot Doc) சென்று, உங்களுக்கு அருகாமையில் கிடைக்கக்கூடிய முன்பதிவுச் சந்திப்புகளைக் கண்டறியலாம்.

Translated By WSLHD Translation Service, 4 August 2021
Tamil